Register Number | | | | | |

**Part III**

# புவியியல் / GEOGRAPHY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

*குறிப்பு :* i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

## பிரிவு - அ

( மதிப்பெண்கள்: 15 × 1 = 15 )

I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. மிக நுண்ணிய அளவினையுடைய மிதக்கக்கூடிய உயிரினங்களை ............................ என்கிறோம்.

2. ............................ ஒரு மிதவெப்ப மண்டல புல்வெளிச் சூழ்வாழிடம் ஆகும்.

3. மக்கள்தொகை கோட்பாட்டை முதன்முதலில் வெளியிட்டவர் ............................ .

4. தேம்ஸ் நதிக்கரை சூழலில் அமைந்துள்ள நகரம் ............................

5. புறநகர் வளர்ச்சிக்கு ............................ ஏற்பட்டுள்ள முன்னேற்றமே காரணமாகும்.

6. பொருட்களின் அளிப்பும், அவற்றின் தேவையும் சந்திக்குமிடம் ............................ ஆகும்.

7. ஒரு நாட்டின் எல்லைக்குள் நிகழ்கின்ற வணிகம் ............................ வணிகம் எனப்படும்.

8. ஒரு நாட்டின் நாணய மதிப்பு அந்நாட்டின் ............................ பொறுத்து அமைகிறது.

9. இரயில் போக்குவரத்தில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ............................ வழி இரயில் பாதையாகும்.

10. வட்டாரம் மற்றும் தலத் தொடர்புகளில் ............................ பயன்படுத்தப்படுகின்றன.

[ Turn over

11. வான்வழிப் படங்கள் முதன்முதலில் ........................... இல் இருந்து எடுக்கப்பட்டன.

12. ........................... மையங்களானது நிலத்தடி நீரின் சரியான உற்பத்தி அளவினையும் அவற்றின் எதிர்காலம் பற்றியும் விவரிக்கும் நிலப்படங்களையும் தருகின்றன.

13. நைல் நதியினால் ........................... மற்றும் ........................... நாடுகள் பயனடைந்து வருகின்றன.

14. நெருக்கடி நிலை ........................... அறிவிக்கின்றது.

15. பத்தாம் நூற்றாண்டில் ........................... வீழ்ச்சி மக்கள்தொகை மிகுதியாலும் வளக்குறைவாலும் ஏற்பட்டது என்ற நம்பிக்கை நிலவுகிறது.

## பிரிவு - ஆ

( மதிப்பெண்கள்: 15 × 1 = 15 )

II. i) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 16. | கயோடா ப்ரோடகால் | அ) | மக்கள்தொகை வளர்ச்சி |
| 17. | நகர்புறத்தில் நீர்க்கசிவு | ஆ) | கதிரியக்கச் சாம்பல் |
| 18. | குடிநீர் பற்றாக்குறை | இ) | 25 முதல் 50 சதவிகிதம் |
| 19. | நீர் அணு உலைகள் | ஈ) | டச்மார்க்ஸ் |
| 20. | ஜெர்மனி | உ) | 67 நாடுகள். |

ii) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 21. | சுரங்கத் தொழில் | அ) | 1800 |
| 22. | இடைப்பட்ட வயது பிரமிடு | ஆ) | 1987 |
| 23. | இலண்டன் | இ) | பல்நோக்கு வளம் |
| 24. | அணைகள் | ஈ) | முதல்நிலைத் தொழில் |
| 25. | பேணத்தகு மேம்பாடு | உ) | வளரும் பொருளாதாரம். |

iii) கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 26. | மால்தஸின் கோட்பாடு | அ) | அமெரிக்க ஐக்கிய நாடு |
| 27. | பின்னடையும் வயது பிரமிடு | ஆ) | 1971 |
| 28. | முன்னேறிய வயது பிரமிடு | இ) | முன்னேறியப் பொருளாதாரம் |
| 29. | நீர் அளிப்பு | ஈ) | சரியும் பொருளாதாரம் |
| 30. | பசுமை அமைதி | உ) | மக்கள் பெருக்கம். |

## பிரிவு - இ

( மதிப்பெண்கள்: $10 \times 1 = 10$ )

III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

31. உயிர்க் கோளத்தில் வாழும் தாவரங்கள், விலங்கினங்கள், சமுதாயம்

அ) சூழ்வாழிடங்கள் ஆ) இயற்தொகுதிகள்

இ) உயிர்த் தொகுதி ஈ) சூழியல்.

32. தனித்த பண்ணை வீடுகள், குக்கிராமம் ஆகியவைகள் ............ குடியிருப்பு ஆகும்.

அ) நகர்ப்புற ஆ) நாட்டுப்புற

இ) மையக்கரு ஈ) நெருக்கமான.

33. மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கும் நாடு

அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ) சீனா ஈ) ஜப்பான்.

34. நாள்தோறும் அல்லது குறிப்பிட்ட நாட்களில் உள்ளூரில் நடைபெறும் வணிகம்

அ) ஊரக வணிகம் ஆ) தல வணிகம்

இ) உள்நாட்டு வணிகம் ஈ) நேரிணை வணிகம்.

35. மனிதனால் வடிவமைக்கப்பட்டு ஏவப்படும் ஒரு தொலை நுண்ணுணர்வு கருவி

அ) செயற்கைகோள் ஆ) புகைப்படக் கருவி

இ) தொலைநோக்கு ஆடி ஈ) விமானம்.

36. பிரேசிலுக்கும் அர்ஜென்டினாவிற்குமிடையே வாதத்திற்கு உட்பட்ட ஆறு

அ) மிஸிஸிபி ஆ) மிசௌரி

இ) லா பிளாட்டா ஈ) ஓரினாகோ.

37. நிலத்தடி நீர் அதிக அளவில் சேகரிக்கப்படும் பகுதி

அ) அடர்ந்த காடுகள் ஆ) புல்வெளிகள்

இ) பாலைவனங்கள் ஈ) விவசாய நிலங்கள்.

[ Turn over

38. முதல் புவிநாள் கொண்டாடப்பட்ட நாடு

அ) ஐக்கிய அரசு　　ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ) இஸ்ரேல்　　ஈ) சீரா லியியோன்.

39. விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் நீரினை சிக்கனமாக பயன்படுத்தும் திட்டம்

அ) தானியங்கும் நீர்ப்பாசனம்

ஆ) பெரிய அளவிலான நீர்ப்பாசனம்

இ) சிறிய அளவிலான நீர்ப்பாசனம்

ஈ) ஹைட்ரோபோனிக்ஸ்.

40. ஏழ்மை எனப்படுவது

அ) சீர் அழிவுகள்　　ஆ) பாதுகாப்பின்மை

இ) இடையூறுகள்　　ஈ) அவசர நிலை.

## பிரிவு - ஈ

( மதிப்பெண்கள்: 10 × 1 = 10 )

IV. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

41. அ) மிதவெப்ப மண்டல ஒத நிலங்கள் புல்வெளிகள் எனப்படும்.

ஆ) மிதவெப்ப மண்டல ஒத நிலங்கள் உவர்சேற்று நிலங்கள் எனப்படும்.

இ) மிதவெப்ப மண்டல ஒத நிலங்கள் சதுப்பு நிலங்கள் எனப்படும்.

42. அ) பணித்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படும்பொழுது ஒரு நாடு அறிவுத்திறன் மற்றும் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடையும்.

ஆ) பணித்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படும்பொழுது ஒரு நாடு கல்வி மற்றும் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடையும்.

இ) பணித்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படும்பொழுது ஒரு நாடு தொழில் துறை மற்றும் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடையும்.

43. அ) சந்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு சந்தைக் கோட்பாடு எனப்படும்.

ஆ) சந்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு மால்தஸ் கோட்பாடு எனப்படும்.

இ) சந்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு மைய இடக் கோட்பாடு எனப்படும்.

44. அ) ஒரு தொழில் அதற்குத் தேவையான பொருட்களை மற்ற தொழிலிருந்து பெறுவதை இடுபொருள் பிணைப்பு என்கிறோம்.

ஆ) ஒரு தொழில் அதற்குத் தேவையான பொருட்களை மற்ற தொழிலிருந்து பெறுவதை வெளிபடு பொருள் பிணைப்பு என்கிறோம்.

இ) ஒரு தொழில் அதற்குத் தேவையான பொருட்களை மற்ற தொழிலிருந்து பெறுவதை செயற்பாட்டு பிணைப்பு என்கிறோம்.

45. அ) தனது தேவைக்கு மேல் அதிகமாக செய்யப்படும் உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி பொருட்கள் எனப்படும்.

ஆ) தனது தேவைக்குமேல் அதிகமாக செய்யப்படும் உற்பத்தி பொருட்கள் உபரி பொருட்கள் எனப்படும்.

இ) தனது தேவைக்குமேல் அதிகமாக செய்யப்படும் உற்பத்தி பொருட்கள் வணிக பொருட்கள் எனப்படும்.

46. அ) சங்கேதக் குறியீடுகள் கொண்டு தொலைதூரத்திற்கு செய்தி அனுப்பப் பயன்படும் ஒரு வழி தந்தி ஆகும்.

ஆ) சங்கேதக் குறியீடுகள் கொண்டு தொலைதூரத்திற்கு செய்தி அனுப்பப் பயன்படும் ஒரு வழி பிரதிகள் ஆகும்.

இ) சங்கேதக் குறியீடுகள் கொண்டு தொலைதூரத்திற்கு செய்தி அனுப்பப் பயன்படும் ஒரு வழி மின்னணு அஞ்சல் ஆகும்.

47. அ) காமா கதிர்கள் முதல் வானொலி அலைகள் வரை கொண்டுள்ள ஒரு ஒளி கற்றை சூரியனிடமிருந்து வெளியேறுதல் மின்காந்த கதிர் வீச்சு எனப்படும்

ஆ) காமா கதிர்கள் முதல் வானொலி அலைகள் வரை கொண்டுள்ள ஒரு ஒளி கற்றை சூரியனிடமிருந்து வெளியேறுதல் அல்பிடா எனப்படும்

இ) காமா கதிர்கள் முதல் வானொலி அலைகள் வரை கொண்டுள்ள ஒரு ஒளி கற்றை சூரியனிடமிருந்து வெளியேறுதல் புறஊதாக் கதிர்கள் எனப்படும்

48. அ) வளர்ந்துவிட்ட நாடுகளில் வீட்டுப் பயன்பாட்டிற்கு நபர் ஒன்றுக்கு தேவைப்படும் நீரின் அளவு 100 லிட்டர் ஆகும்.

ஆ) வளர்ந்துவிட்ட நாடுகளில் வீட்டுப் பயன்பாட்டிற்கு நபர் ஒன்றுக்கு தேவைப்படும் நீரின் அளவு 200 லிட்டர் ஆகும்.

இ) வளர்ந்துவிட்ட நாடுகளில் வீட்டுப் பயன்பாட்டிற்கு நபர் ஒன்றுக்கு தேவைப்படும் நீரின் அளவு 300 லிட்டர் ஆகும்.

[ Turn over

49. அ) 20 ஆம் நூற்றாண்டின் வெப்பநிலை அதிகரிப்பு பற்றி வட அயன மண்டல புதிய புள்ளி விவரப்படி கூறுவது 19 ஆம் நூற்றாண்டின் அதிக அளவு.

ஆ) 20 ஆம் நூற்றாண்டின் வெப்பநிலை அதிகரிப்பு பற்றி வட அயன மண்டல புதிய புள்ளி விவரப்படி கூறுவது கடந்த நூற்றாண்டின் அதிக அளவு.

இ) 20 ஆம் நூற்றாண்டின் வெப்பநிலை அதிகரிப்பு பற்றி வட அயன மண்டல புதிய புள்ளி விவரப்படி கூறுவது கடந்த 100 ஆண்டுகளில் குறைந்த அளவு.

50. அ) ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002 இல் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்ததன் நோக்கம் மென்பொருள் மேம்பாடு ஆகும்

ஆ) ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002 இல் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்ததன் நோக்கம் போக்குவரத்து மேம்பாடு ஆகும்

இ) ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002 இல் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்ததன் நோக்கம் பேணத்தகு மேம்பாடாகும்.

## பகுதி - II

( மதிப்பெண்கள்: $15 \times 2 = 30$ )

V. *குறிப்பு :* i) 50 வார்த்தைகளில் சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஏதேனும் 15 வினாக்களுக்கு மட்டும் விடையளி.

51. முற்காலத்தில் மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய இயற்கை தடைகள் யாவை ?

52. வயதின் அடிப்படையில் மனிதப் பணித்திறனை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம் ? அவை யாவை ?

53. சூழலமைவு என்பது எவற்றைக் குறிக்கும் ?

54. இரட்டை கிராமங்களின் அமைப்பினைக் கூறுக.

55. மையக் கிராமம் குறித்து சிறு குறிப்பு தருக.

56. தொழிலக அமைவிடத்தில் எரிசக்தியின் பங்கு யாது ?

57. வணிகக் குழுமம் ( Trade blocks ) குறித்து எழுதுக.

58. நேரிணை வணிகம் என்றால் என்ன ?

59. சந்திப்புகள், தடங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.

60. ஆழ்கடல் தந்தித் தொடர்பு குறித்து இரு குறிப்புகள் தருக.

61. தொலை நுண்ணுணர்வின் இரு பெரும் பிரிவுகள் யாவை ?

62. நீர் மேலாண்மை மூலம் நீரின் அளவு மற்றும் தரத்தினை உயர்த்த கூறப்படும் இரண்டு வழிகள் யாவை ?

63. நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் நீர்ப் பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை ?

64. மறு சீரமைப்பு மற்றும் நிர்மாணித்தல் என்பது என்ன ?

65. சாதனம் - வரையறு.

66. நெக்டான் - சிறு குறிப்பு தருக.

67. கழிமுகம் - சிறு குறிப்பு தருக.

68. கடல் வாழ் இயற்தொகுதிகளில் காணப்படும் அதி முக்கியமானதான இயற்தொகுதிகள் யாவை ?

69. குடியிருப்பின் செயல்பணிகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் அடிப்படை வகைகள் இரண்டினைக் கூறுக.

70. *தென் கிழக்காசிய கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் யாவை ?*

## பகுதி - III

( மதிப்பெண்கள்: 6 × 5 = 30 )

VI. *குறிப்பு :* i) ஒவ்வொரு வினாவுக்கும் 200 வார்த்தைகளில் சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஏதேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விடையளி.

71. நாகரீகங்கள் எவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்தன ?

72. நாட்டுப்புறக் குடியிருப்பு - குறிப்பு வரைக.

73. நான்காம் நிலைத் தொழில்களை விவரி.

74. கடலடி குடைவு வழி - குறிப்பு வரைக.

75. பதிம முறைப்பாட்டின் அடிப்படை பணிகளை விவரி.

76. நீர் அறத்தினை எவ்வழிகளில் கடைப்பிடிக்கலாம் ?

77. சீர்குலைவின் அவசர மேலாண்மை முறைகளை விவரி.

78. வணிகச் சமநிலை - விவரி.

79. இயல்பான தாவர வேறுபாட்டுக் குறியீடு என்பதன் பொருள் யாது ?

[ Turn over

## பகுதி - IV

VII. *குறிப்பு :* i) எல்லா வினாக்களுக்கும் விரிவாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சம மதிப்பெண்கள்.

iii) பிரிவு 'அ' விலிருந்து ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளி.

### பிரிவு - அ

( மதிப்பெண்கள்: 3 × 10 = 30 )

80. உலக மக்கள்தொகை வளர்ச்சியை பற்றி விவரி.

81. சஹேல் பாலைவனமானதன் காரணங்களை விளக்குக.

82. நீர் மதிப்பு வாய்ந்த ஒரு வளம் - விளக்குக.

83. புவியியல் ரீதியாக வணிகத்தை வகைப்படுத்தி விளக்குக.

84. முன்னேறும் வயது பிரமிடு பற்றியும், பின்னடையும் வயது பிரமிடு பற்றியும் விளக்குக.

### பிரிவு - ஆ

( மதிப்பெண்கள்: 1 × 10 = 10 )

85. காடுகளின் சூழ்வாழிடங்களை உலகப் படத்தில் குறித்து ஏதேனும் ஒரு சூழ்வாழிடத்தை விவரி.

*அல்லது*

உலகின் நில வரைபடத்தில் நிலநடுக்கப் பகுதிகளை குறித்து, அதற்கு சுருக்கமான விளக்கம் தருக.